# பெண்ணே !

# உனக்காக...

"சௌந்தாயம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண் கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்தீரியே புகழப்படுவாள்" ( நீதி - 31:30)

புகழப்படுகிறவளே நல்ல மனைவியாயிருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தருக்கு பயப்படும்போது ஞானத்தை பெற்றுக்கொள்ளலாம்.

கர்த்தருக்கு பயப்பட்ட சிப்பிராள் பூவாள் என்ற இரண்டு மருத்துவச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன் ஆண்பிள்ளைகள் பிறப்பின்போதே கொல்லப்படவேண்டும் என்று பார்வோனின் கட்டளை வந்த போதும் கர்த்தருக்கு பயந்து அமைதியாக செயல்பட்டவர்கள். கர்த்தருக்கு பயப்படும்போது கர்த்தருக்கு மட்டும் கீழ்ப்படியவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். இந்த மருத்துவச்சிகள் கர்த்தருக்குப் பயந்து ராஜாவின் கட்டளையையே தள்ளி வைத்து விட்டனர். பார்வோனும் இவர்களை அழைத்து ஆண்பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற காரியம் என்ன என்று விசாரிக்க சற்றும் பயப்படாமல், உளறிக் கொட்டாமல் தெளிவாய் தேவ ஞானத்தோடு பதில் அளித்ததை சிந்தியுங்கள்.

"அதற்கு மருத்துவச்சிகள் பார்வோனை நோக்கி; எபிரேய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரிகளைப் போல் அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள். மருத்துவச்சி அவர்களிடத்துக்குப் போகுமுன்னமே அவர்கள் பிரசவித்ததாகும் என்றார்கள்" - யாத் 1:19

என்னே ஞானமான பதில் பாருங்கள். ராஜாவை எதிர்த்தும் பேசவில்லை. ஞானமான பதிலின் நிமித்தம் பார்வோனால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று.

"கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தை போதிக்கும்" - (நீதி 15:33)

எல்லா சூல்நிலையிலும் தேவ ஞானத்தோடு செயல்படும் பெண்ணை யாரால் பாராட்டாமல் இருக்க முடியும் ? பெண் என்றல் அடிமை போன்று வாழ வேண்டும் என்று வேதம் கூறவில்லை. சகல உரிமையும் உண்டு. அதே போல் பொறுப்புகளும் மிக அதிகமே. சகிப்புத்தன்மையை அடிமைத்தனம் என்று மிக தவறான கணக்கிட்டு சோர்வுக்குள்ளாகாதீர்கள். என் வீடு, என் கணவர் என்று சந்தோஷமாய் மனநிறைவோடு வேலை செய்யுங்கள்.

நற்குணம், சுறுசுறுப்பு, கவனமாயிருத்தல், உதவி செய்தல் ஆகிய பண்புகளுக்கு ஈடு ஏது ? சுறுசுறுப்புடன் காணப்பட்ட சரீரம் ஒத்துழைக்க வேண்டும். சத்தான உணவை எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்துங்கள். சரீர ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். நேரம் தவறாமல் சாப்பிடுங்கள். வேலையில் மூழ்கி சாப்பாட்டைத் தவிர்த்தல் வேண்டாம். சற்று நேரம் பகலில் ஓய்வு எடுப்பது, மாலை நேரம் நடப்பதும் நல்லது. தூங்கியோ, டி.வி. முன் அமர்ந்தோ, பக்கத்து வீடுகளில் வீண் அரட்டைக்கு நேரம் கொடுத்தோ நேரத்தை வீணாக்காதவளே கர்த்தருக்குள் பயப்படுவாள். ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டமிட்டு செலவு பண்ணுங்கள்.

"தன்னை பலத்தால் இடைக்கட்டிக் கொண்டு தன் கைகளை பலப்படுத்துகிறாள் " - (நீதி 31:17)

வேலைக்கு போகும் பெண்கள், வீட்டு வேளைகளில் உதவி செய்ய வேலையாள் அமர்த்திக் கொள்ளுங்கள். வீட்டு சமாதானம் கெட்டு நீங்கள் சம்பாதிக்க வேண்டியதில்லை. சமாதானமாய் வேலைக்கு போக முடிந்தால் போங்கள். இல்லாவிட்டால் கணவருடன் ஆலோசித்து, வீட்டிலிருந்தே சில காரியங்களை செய்ய முடிவெடுங்கள். குணசாலியான ஸ்தீரி என்னவெல்லாம் செய்தாள் என்று நீதி 31ல் வாசித்துப் பாருங்கள். அந்தப்

பட்டியலில் கூறப்பட்டுள்ள யாவற்றையும் செய்வது ஒருவேளை முடியாமல் போகலாம். ஆனால் இயன்றதை சுறுசுறுப்பாய் செய்ய ஆரம்பியுங்கள். இன்றைய வாழ்கை முறைக்கேற்ப தரத்திற்க்கேற்ப செய்ய சிந்தியுங்கள்.

காலை மாலை குடும்ப ஜெபத்தை பொறுப்புடன் நடத்துங்கள். பிள்ளைகளை ஜெபத்தில் பழக்குவியுங்கள். வேதத்தை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்.

எனக்கு சமைக்கத் தெரியாது என்று கூறுவது நாகரீகம் என்று தவறாய் எண்ண வேண்டாம். நல்ல உணவை சமைத்து கணவரையும் பிள்ளைகளையும் சந்தோஷப்படுத்துங்கள். நல்ல உணவு என்பது உயர்ந்த உணவல்ல. வகைகள் இருக்கட்டும் செய்ததையே மாறி மாறி செய்து வெறுப்பு ஏற்படுத்தாதீர்கள். உங்கள் திறமையினால் அசத்த கற்றுக்கொள்ளுங்கள். சமையலுக்கு என திட்டமிடுங்கள். புதிது புதிதாய் செய்த சிந்தனையை ஓடவிடுங்கள்.

"அவள் சோம்பலின் அப்பத்தை புசியாமல். தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள் " - (நீதி 31:27)

கணவரை உற்சாகப்படுத்துங்கள். கணவரின் வீட்டாரை நேசியுங்கள். கணவரின் பெலவீனத்தை சுட்டிக்காட்டாமல் ஜெபத்தில் தாங்குங்கள். இதுவரை இப்புத்தகத்தில் நீங்கள் வாசித்த ஒவ்வொரு தேவ ஆலோசனையையும் பின்பற்றுங்கள். ஜெபத்திற்கு, வேத வாசிப்பிற்கு, வேத தியானத்திற்கு, பாடித் துதிப்பதற்கு என நேரம் ஒதுக்குங்கள். வேதத்தை வாசிக்க வாசிக்க ஞானம் கிடைக்கும். தியானிக்கும் போது பெலன் கிடைக்கும். ஜெபிக்கும் போது புத்துணர்வு அடைகிறீர்கள். பாடும்போது மனபாரம் நீங்கும். துதியின் ஆவி நிரப்பும். தடைகள் தகர்ந்து போகும். ஒவ்வொரு நாளும் ஒரு வசனத்தை தேவ சமூகத்தில் பெற்றுக்கொண்டு அந்நாளின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அதை அறிக்கை செய்து வெற்றியை சுதந்தரியுங்கள்.

அப்பப்பா இப்படியெல்லாம் வாழ நான் என்ன இயந்திரமா ? முடியாது என்று முடிவு கட்டாதீர்கள். உங்களால் முடியும் என்பதையே வேதம் போதிக்கிறது. இவைகளைச் செய்வதற்கு ஞானமே முக்கியம். வேதமும் அதையே தெளிவுபடுத்துகிறது.

"ஞானமே முக்கியம். ஞானத்தை சம்பாதி. என்னத்தை சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக்கொள்" - (நீதி 4:7)

ஞானத்தில் குறைவுள்ளவர்களுக்கு சம்பூரணமாய் தருகிறவர் நமது ஆண்டவர் அவரிடத்தில் சந்தேகமில்லாமல் கேட்டு பெற்று கொள்ளுங்கள். ஆவிக்குரிய புத்தகங்களை வாசித்து கர்த்தருடைய ஆலோசனைகளால் இதயத்தை நிரப்புங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் ஞானமாய் கையாள கர்த்தருக்குப் பயப்படுதலே முக்கியம். அறிவு, புத்தியெல்லாம் கற்றும், கேட்டும் பெற்றுக்கொள்பவை. ஆனால் ஞானமோ கர்த்தருடைய சமூகத்திலிருந்து வருவது. அவர் சமூகத்தில் சென்று அவர் பாதம் காத்திருக்கிறவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் வெகுமதி தான் ஞானம் என்றால் மிகையாகாது.

பிரியமானவர்களே இந்த அத்தியாயத்தை வாசித்த நீங்கள் தியானியுங்கள். தேவ ஒத்தாசை பெறுங்கள். கர்த்தர் நாமம் மகிமைப்படும்படி வாழ கர்த்தர் தாமே கிருபை செய்வாராக !

புத்தியுள்ளவளாயிரு - வீட்டைக்கட்டுவாய் !

குணசாலியாயிரு - கிரீடமாயிருப்பாய் !!

கர்த்தருக்கு பயப்படு - புகழப்படுவாய் !!!